EJCTS
www.ejcts.mayas.info

Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 55

## காரைக்கால் அம்மையாரின் பாடல்களில் இயற்கை கூறுகள்

*ஜெ. விஜி*
*முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்), தமிழ்த்துறை*
*அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, செய்யாறு - 604 407.*
*மின்னஞ்சல் : vijijayaraman92@gmail.com*
*முனைவர். கு. கண்ணன்*
*இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி*
*செய்யாறு - 604 407.*

## முன்னுரை

சங்க காலத்தில் அகப்பாடல்களில் இயற்கையை விரிவாகப் பாடியுள்ளன. மனிதர்களுடைய காதல் உணர்வைப் பாடுவதற்கு இயற்கை சங்கப் புலவர்களுக்கு உதவியது. பின்னால் அறநூற்கள் பெருகிய போது இயற்கையைப் பாடுவது நின்று போனது. சமண, பௌத்த சமயம் மேலோங்கிய துறவறமும், அறக்கோட்பாடுகளும் வலியுறுத்தப்பட்டன. அப்போது இயற்கையை இரசிப்பது, வாழ்க்கையை மிகழ்வோடு வாழ்வது, கலைகளைத் துய்ப்பது என்பன சிற்றின்பத்தூண்டல் என்பதால் விலக்கப்பட்டன. இச்சூழலல், பழைய தமிழ் மரபுகளை மீட்டெடுத்துப் போற்றிப் பாடினார். இயற்கையில் இறைவனைக் காண்பதை, மக்களிடையே தம் கவிதை மூலம் பரப்பினார் இறைவன் அருள் அனுபவத்தைத் தமிழ் அக மரபில் கடவுளை காதலாகப் (பகவத் காமம்) பாட, இயற்கையையும் அஃறிணை உயிர்களையும், கவிதைக்குப் பின்னணியாக்கினார்.

இயற்கை கூறுகள்

## காரைக்கால் அம்மையாரின் பாடல்களில் இயற்கை கூறுகள்

காரைக்கால் அம்மையார் தன்னுடைய பாடல்களில் சில இடங்களில் இயற்கைப் பற்றி வர்ணனை வழங்கியுள்ளார். மேலும் திருவலங்காட்டு மூத்த திருப்பதிகம் வழி திருவாலங்காட்டில் உள்ள இயற்கை எழில் அழகை தன்னுடைய பாடலில் பாடியுள்ளார்.

மரங்கள்

"எட்டி இலவம் ஈகை சூரை காரை படர்தெங்கும்
சுட்ட சுடலை சூழ்ந்த கள்ளி சோர்ந்த"1

எட்டி, இலவம், ஈகை, சூரை, காரை, கள்ளி போன்ற மரங்களும், செடிகள், சூழ்ந்ததும் இருக்கும் தன்மையுள்ள இடம் திருவலங்காட்டு ஆகும்.

"முள்ளி தீந்து முளரி கருகி மூளை சொரிந்துக்குக்
கள்ளி வற்றி வெள்ளில் பிறங்கு கருவெங் காட்டுள்ளே"2

முள்மரம், தீய்ந்து, முளரி என்னும் முள் செடியும் கருகி மூளை சொரிந்து எழுந்து கள்ளியும் வற்றி விளாமரம் விளங்குகின்ற திருவாhலாங்காடு.

"வேய்கள் ஓங்கி வெண்முத்து உதிர வெடிகொள்"3

முற்றிய மூங்கில்கள் உதிர்க்கும் முத்துக்கள் நான்கு பக்கங்களில் சிதறிக் கிடக்கும்.

"வாகை விரிந்து வெண் ணெற்றொலிப்ப
மயங்கிருள் கூர்நடுநாளை யாங்கே"4

பாலை நிலத்திற்குரிய வாகை மரம் விரிந்து நின்றிட அதனின்று முற்றிய வெண்மையான நெற்றுக்கள் காற்றில் ஒலி செய்யவும் இருக்கும் தன்மை உடையது ஆலங்காடு.

இவ்வாறெல்லாம் திருவாலங்காட்டில் உள்ள மரங்களும், அங்கு இருக்கும் செடிகளும் பற்றியும் அம்மையாரின் பதிகம் வழி அறியப்படுகிறது.

பறவை, விலங்கு

"கூகையோடு ஆண்டலை பாட ஆந்தை
கோடதன் மேற்குறித்து ஓடவீசி
ஈகை படர் தொடர் கள்ளி நீழல்
ஈமம் இடுசுடு காட்டகத்தை"5

மேலும், அம்மையார் திருவாலங்காட்டில் உள்ள இயற்கை கூறுகள் பலவிதமான வர்ணனை இருக்கிறது.

அறிவினை மயக்குறும் நள்ளிரவில் கோட்டானொடு ஆண் தலை போன்ற வடிவினையுடைய பறவை பாடிடவும், ஆந்தை கொம்புடன் அதன்மேல்

குதித்து ஓடிய கொடி படர்ந்த கள்ளியின் நிழலின் ஈமம் அடுக்கப்பட்ட இடுகாட்டை விளக்குகிறார்.

“குண்டில் ஓமக்குழிச் சோற்றை வாங்கிக்
குறுநரி தின்ன அதனை முன்னே
கண்டிலோ மென்று கனன்று பேய்கள்
கையடித்து ஓடிடு காடரங்கா
மண்டலம் நின்றங்கு உளாளம் இட்டு
வாதித்து வீசி எடுத்த”6

மிக ஆழ்ந்துள்ள வேள்விக்குரிய குழியினுள் இடப்பட்ட சோhற்றை குறுநரி எடுத்துத் தன்றிடவும், அதனைக் கண்ட பேய்கள் “அதனை நாம் முன்பே பார்க்காமல் போனோமே” என சீற்றங்கொண்டு கையெடித்துச் சுடுகாட்டினைச் சுற்றி உள்ள நரிகள் மற்றும் பேயின் நிலையாக ஆடியதாக கூறுகிறார்.

“பட்டடி நெட்டுகிர்ப் பாறுகாற்பேய்
பருந்தொடு கூகை பகண்டை ஆந்தை
குட்டியிட முட்டை கூகை பேய்கள்
குறுநரி சென்றணங்கு ஆடுகாட்டில்”7

பருந்து, கூகை, சீவற்பறவை, ஆந்தை ஆகியவை முட்டைகள் இடவும், குறுநரி வெறியாடவும் பின்புறம் அடித்து

“புட்கள் பொதுத்த புலால் வெண்தலையைப் புறம்மே நரிகவ்வ
அட்கென் றழைப்ப ஆந்தை வீச அருகே சிறுகூகை
உட்க விழிக்க ஊமன் வெருட்ட ஓரிகதித் தெங்கும்
பிடக நட்டம் பேணும் இறைவன் பெயரும் பெருங்காடே”8

பறகைள் கொத்தித் தின்னுதலால் ஓட்டைகள் கொண்ட புலால் வெண்தலையை வெளிப்புறத்தில் நரி பற்ற, அட்கு என்று அழைக்கப்படும் ஆந்தை வீசவும், அருகில் சிறிய கேட்டான் அஞ்சுமாறு விழிக்க, ஊமன் என்னும் பறவை வெருட்ட, ஓரிபெருங்குர் கூவிட அவ்வொலி விண்ணையே பிளக்குமாறு இருக்கும்.

“கள்ளி வற்றி வெள்ளில் பிறங்குகடுவெங் காட்டுள்ளே
புள்ளி உழைமான் தோலொன்று உடுத்துப் புலித்தோல் பயிற்கிட்டும்”9

கள்ளி செ டிவற்றி விளாமரம் விளங்குகின்ற மிகக் கொடிய காட்டில் புள்ளிகளை உடைய மானின் தோலை அணிந்து இருக்கும் இறைவன் இடம் திருவாலாங்காட்டு ஈசன்,

“வாளை கிளர வளைவாள்
எயிற்று வண்ணச் சிறுகூகை
முளைத் தலையும் பிணமும்
விழுங்கி முரலும் முதுகாட்டில்
தாளிப் பனையின் இலைபோல்”10

வாளைப்போல் விளங்கி வளைந்து ஒளிவீசும் பல்லும் நிறமும் உடைய சிறிய கோட்டானின் மூளையோடு கூடிய தலைவியையும் பிணமும் விழுங்கி ஒலிக்கும் சுடுகாட்டில் தாளிப்பனையின் இலைபோன்ற உள்ள மரங்கள் உள்ள இடம் திருவாலங்காடு

“கடுவன் உகளும் கழைசூழ்
பொதுப்பிற் கழுகும் பேயுமாய்
இடுவெண் தலையும் ஏமப்
புகையும் எழுந்த பெருங்காட்டில்
கொடுவெண் மழவும் பிறையும்
ததும்பக் கொள்ளென்று இசைபாடப்
படுவன் துடியும் பறையும்
கறங்கப் பரமன் ஆடுமே”11

ஆண் குரங்குச் சுற்றித் திரியும் மூங்கில் மிக்குள்ள இளமரச் சோலையில் கழுகும் பேயும் இடுகின்ற வெண்தலையும் ஏமப்புகையும் எழுந்த சுடுருகாடுயில் விலங்கின் செயல் ஆகும்.

# முடிவுரை

காரைக்கால் அம்மையார் தன்னுடைய பதிக வழியாக திருவாலங்காட்டில் இயற்கை வருணனையை இவ்வாறு அம்மையார் மிக நுட்பமாகத்தம் பாடல்களில் பயன்படுத்தியுள்ளார். பின் நாளில் வரும்தேவார ஆசிரியர் ஆன திருஞானசம்பந்தன் பாடல் இயற்கை வருணனை இடம் பெறக்காரணம் அம்மையார் பாடல் (பதிகம்) என்று கூறலாம்.

மேலும், காரைக்கால் அம்மையார் பதிகத்தின் வழி அன்று உள்ள இயற்கை அமைப்பு மற்றும் இயற்கை சூழல் பற்றி அறிய அம்மையார் பாடல் வழியாக அறிந்துகொள்ள முடிகிறது.

# அடிக்குறிப்பு

1.திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், 2:1
2.மேலது, 2:5
3.மேலது, 2:8
4.மேலது, 1:3
5.மேலது, 2:10
6.மேலது, 1:6
7.மேலது, 1:6
8.மேலது, 2:3
9.மேலது, 2:5
10.மேலது, 2:6
11.மேலது, 2:9

# பார்வை நூல்

காரைக்கால் அம்மையார் - கோமதி சூரியமூர்த்தி,
சாகித்திய அகாதெமி, 2007